பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**23 03 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்குவங்க மாநிலத்தில் முதலாவது கூடுதல் வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

2. பிஜேபி தலைவர் திரு நிதின் நபின், அக்கட்சியின் மாநில நிர்வாகிகளுடன் கட்சியின் செயல்திட்டம் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

3. எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைப்பதிலும் நிலக்கரி வாயுவாக்கம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

4. ஈரானின் எதிரிகளைத் தவிர மற்ற அனைத்து நாடுகளுக்கும் ஹார்முஸ் ஜலசந்தி திறந்தே இருக்கும் என்று அந்நாட்டு அதிபர் திரு மசூத் பெசெஷ்கியன் கூறியுள்ளார்.

5. இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபய் சிங் மற்றும் அனாகத் சிங் பட்டம் வென்றனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடைமுறையின்கீழ் முதலாவது கூடுதல் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடும் என்று அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. மனோஜ் குமார் அகர்வால் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆவணங்கள் முழுமையாக சரிபார்க்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் இந்தப் பட்டியலில் இடம்பெறும் என்று கூறினார்.

நிலுவையில் இருந்த 27 லட்சம் வாக்காளர்களின் மேல்முறையீடுகள் தீர்க்கப்பட்டுள்ளது என்றும், நாள்தோறும் சுமார் 2 லட்சம் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகம் அவர் தெரிவித்தார்.

இந்தப் பட்டியல் வெளியான பிறகு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வாக்காளர்கள் தேர்தல் ஆணையத்தின் நெட் செயலி அல்லது ஆணையத்தின் இணையதளம் வழியாக ஆன்லைனிலும், அல்லது மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலகங்களில் நேரடியாகவும் மேல்முறையீடு செய்யலாம் என்று அவர் கூறினார்.

பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் தடுக்க கூட்டத்தைக் கட்டுப்படுத்தும்

நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில், மேற்கு வர்தமான் மாவட்டத்தில் உள்ள துர்காபூரில் அரசுச் சுவர்களில் இருந்த அரசியல் பிரச்சார எழுத்துக்களை அகற்றிக்கொண்டிருந்த தேர்தல் ஆணைய ஊழியர்கள் இருவர் தாக்கப்பட்டனர்.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் பேரில், கோராங்பாரா தபால் நிலையப் பகுதியில் சுவர்களில் இருந்த எழுத்துக்களை அழித்துவிட்டு வாகனத்தில் ஏற முயன்றபோது, திரிணாமுல் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களால் அவர்கள் தாக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

மத்தியப்படைகளும், காவல்துறையினரும் விரைந்து வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்ததாக மாவட்ட தேர்தல் அதிகாரி கூறினார்.

இந்தச் சம்பவத்திற்கு பிஜேபி கடும் கண்டனம் தெரிவித்ததுடன், ஆளும் கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய

தங்கள் கட்சித் தொண்டர்கள் இருவரும் தாக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

<<<<>>>>

பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் நேற்று அக்கட்சியின் மாநிலத் தலைவர்கள், மாநிலப் பொறுப்பாளர்கள் மற்றும் அமைப்புப் பொதுச் செயலாளர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தின்போது கட்சியின் அமைப்பு ரீதியான விவகாரங்கள் மற்றும் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள கட்சியின் செயல்திட்டங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டதாக சமூக ஊடகத்தில் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைப்பதிலும்  நிலக்கரி வாயுவாக்கம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற பாரத் மின்சார உச்சிமாநாட்டில் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், உலகளவில் நிலக்கரி இருப்பு அதிகம் உள்ள நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாகவும், நாட்டின்

நிலக்கரி இருப்பு சுமார் 400 பில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

நாட்டின் எரிசக்தித் துறையில் நிலக்கரி தொடர்ந்து முக்கியப் பங்கு வகித்து வருவதாகவும், மொத்த எரிசக்தி பயன்பாட்டில் சுமார் 55 சதவீத பங்களிப்பையும், நாட்டின் மின் உற்பத்தியில் சுமார் 74 சதவீத பங்களிப்பையும் நிலக்கரி கொண்டுள்ளதாகவும் திரு கிஷன் ரெட்டி குறிப்பிட்டார்.

<<<<>>>>

இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக பாடுபட்டு உயிர் தியாகம் செய்த மாவீரர்கள் பகத் சிங், சுக்தேவ் மற்றும் ராஜ்குரு ஆகியோரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதை முன்னிட்டு, பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூர் மாவட்டத்தில் உள்ள ஹுசைனிவாலா தேசிய தியாகிகள் நினைவிடத்தில் இன்று காலை முதல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

1931-ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று லாகூர் சிறையில் இந்த மூன்று மாவீரர்களும் தூக்கிலிடப்பட்ட பிறகு, அவர்களின் உடல்கள் சட்லஜ் நதிக்கரையில் உள்ள இந்த ஹுசைனிவாலாவில்தான் தகனம் செய்யப்பட்டன.

அந்த இடம் தேசிய நினைவிடமாகப் போற்றப்படுகிறது.

<<<<>>>>

மேற்கு ஆசியாவில் பல வழித்தடங்களில் விமான சேவைகள் இன்னும் குறைவாகவே உள்ள நிலையில், ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனங்கள் இன்று மொத்தம் 30 விமானங்களை அந்தப் பிராந்தியத்திற்கு இயக்கவுள்ளன.

இரு நிறுவனங்களும் ஜெட்டாவிற்கான தங்களது வழக்கமான சேவைகளைத் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் சவுதி அரேபியாவின் இந்த நகரத்திற்கு இடையே மொத்தம் 10 விமானங்கள் இயக்கப்படும்.

ஏர் இந்தியா நிறுவனம் டெல்லி மற்றும் மும்பையிலிருந்து தலா ஒரு விமானத்தை இயக்கும் என்றும், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் பெங்களூரு, கோழிக்கோடு மற்றும் மங்களூருவிலிருந்து விமானங்களை இயக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரானை உலக வரைபடத்திலிருந்து அழித்துவிடலாம் என்ற அமெரிக்காவின் கனவு நிறைவேறாது என்று ஈரான் அதிபர் திரு மசூத் பெசெஷ்கியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் சமீபத்தில் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளித்துள்ள அவர், வரலாறு படைக்கும் ஒரு தேசத்தின் உறுதிக்கு எதிரான விரக்தியே இது என்று கூறியுள்ளார்.

ஈரானின் எதிரிகளைத் தவிர மற்ற அனைத்து நாடுகளுக்கும் ஹார்முஸ் ஜலசந்தி திறந்தே இருக்கும் என்றும் திரு. மசூத் பெசெஷ்கியன் தெரிவித்தார்.

இதற்கிடையில், ஈரானிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சையத் அப்பாஸ் அரக்சி, கடல்சார் வணிகத்திற்காக ஹார்முஸ் ஜலசந்தி திறந்தே இருப்பதாக கூறியுள்ளார்.

ஈரானிய நாடாளுமன்ற சபாநாயகர் திரு. எம்.பி. காலிபாப், அமெரிக்க ராணுவ பட்ஜெட்டிற்கு நிதி வழங்கும் நிறுவனங்களும் ஈரானின் இலக்கு என்று எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் வாஷிங்டனில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க நிதித்துறை அமைச்சர் திரு ஸ்காட் பெசென்ட், ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளைத் தொடர அமெரிக்காவிடம் போதுமான ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

ஈரானைக் கையாள்வதில் அதிபர் திரு.டோனல்ட் ட்ரம்ப், அனைத்து வாய்ப்புகளையும் தயாராக வைத்திருப்பதாக அவர் கூறினார்.

<<<<>>>>

மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில், போரில் ஈடுபடும் நாடுகள் அதிகபட்ச ராணுவக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை இயக்குநர் திரு. டெட்ரோஸ் அதானோம் அழைப்பு விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஈரானில் உள்ள அணுசக்தி கட்டமைப்புளுக்கு அருகே நடத்தப்படும் தாக்குதல்கள் பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அவர் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ஈரானில் உள்ள நடான்ஸ் செறிவூட்டல் வளாகம் மற்றும் அணுசக்தி நிலையம் அமைந்துள்ள இஸ்ரேலிய நகரமான டிமோனா ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், போர் ஒரு அபாயகரமான கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மத்திய கிழக்கின் நிலையை, மிகுந்த கவலையுடன் தொடர்ந்து கவனித்து வருவதாக போப்பாண்டவர் திரு. லியோ தெரிவித்துள்ளார்.

உலகின் பிற பகுதிகளைப் போலவே, அந்த பிராந்தியம் போர் மற்றும் வன்முறையால் சிதைக்கப்பட்டுள்ளது என்றும் இந்த மோதல்களால் பாதிக்கப்படும் ஏராளமானோரின் துயரத்தைக் கண்டு நாம் அமைதியாக இருக்க முடியாது என்றும் சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

அவர்களை காயப்படுத்துவது ஒட்டுமொத்த மனிதகுலத்தையே காயப்படுத்துவதாகும் என்றும் இந்தப் போர்களால் ஏற்படும் மரணமும் வலியும் ஒட்டுமொத்த மனித குடும்பத்திற்கே ஒரு அவமானமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் கராச்சியில் கடந்த ஜனவரி மாதம் ஒரு வணிக வளாகத்தில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 80-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சோகம் மறைவதற்குள், அதே வளாகத்தில் நேற்று மீண்டும் தீ விபத்து ஏற்பட்டது.

ஏற்கனவே பலவீனமடைந்திருந்த கட்டிடத்தின் சில பகுதிகள் இந்த விபத்தால் மேலும் சேதமடையக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

தீ விபத்தைத் தொடர்ந்து வணிக வளாகத்தின் முன், பெருமளவிலான மக்கள் திரண்டனர்.

மீட்புப் படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

<<<<>>>>

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபய் சிங் மற்றும் அனாகத் சிங் பட்டம் வென்றனர்.

மும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அபய் சிங் - இந்தியாவின் வீர் சோட்ரானி-ஐ வென்று பட்டத்தை கைப்பற்றினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அனாகத் சிங் - எகிப்தின் Hana Moataz வென்றார்.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை - கோவா அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

மற்றொரு போட்டியில் பெங்களூரு அணி 3-1 என்ற கோல் கணக்கில் காசி அணியை வென்றது.

--------------

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர்ச் சூழலைக் கருத்தில் கொண்டு, ஃபிடே மகளிர் கேண்டிடேட்ஸ் செஸ் தொடரிலிருந்து விலகவுள்ளதாக இந்திய கிராண்ட்மாஸ்டர் கோனெரு ஹம்பி அறிவித்துள்ளார்.

இந்த தொடர் சைப்ரஸில் மார்ச் 28 முதல் ஏப்ரல் 16 வரை நடைபெறவுள்ளது.

இது குறித்து சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ள கோனெரு ஹம்பி, பாதுகாப்பு உத்தரவாதங்கள் அளிக்கப்பட்ட போதிலும், சொந்த காரணங்களால் இந்தத் தொடரிலிருந்து விலகுவதாகவும், இது ஒரு கடினமான ஆனால் அவசியமான முடிவு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<The End>>>>